


# “பெரியார்தான் எங்களுக்கு நிரந்தரத் தலைவர்!”

**கழக இளைஞர் அணி நடத்திய 'தி.மு.க. 75 அறிவுத் திருவிழா' நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற 'இருவண்ணக் கொடிக்கு வயது 75' கருத்தரங்கத்தின் பத்தாவது அமர்வில், 'போராட்டங்களின் இயக்கம்' என்ற தலைப்பில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக்கட்சி துணைப் பொதுச்செயலாளர் வாலாசா வல்லவன் அவர்கள் ஆற்றிய உரை :**

“1949 செப்டம்பர் 17 பெரியார் பிறந்த நாளில் தி.மு.க. உருவானது. அப்போது, தி.மு.க-வை ஒடுக்குவதற்கு காங்கிரஸ் மிகப்பெரிய திட்டங்களை எல்லாம் தீட்டியது. தி.மு.க. அனுபவித்த அளவுக்குக் கொடுமையை, கம்யூனிஸ்ட் கட்சி அனுபவித்த அளவுக்குக் கொடுமையை இந்த நாட்டில் வேறு எந்தக் கட்சியும் அனுபவித்திருக்காது.

### தடை

அண்ணா 'ஆரிய மாயை' நூலை 1943-இல் எழுதினார். ஆனால் 1950-இல், அந்த நூல் தடை செய்யப்பட்டது. நூல் எழுதப்பட்டு 3,000 பிரதிகள் விற்கப்பட்டு, ஏழு ஆண்டுகள் கழித்து, அந்த நூலுக்குத் தடை விதிக்கப்பட்டது. அண்ணா அவர்களுக்கு, அந்த நூலை எழுதியதற்காக ஆறு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அண்ணா அவர்களுடைய நூல்களிலேயே 'திராவிடர் நிலை', 'விடுதலைப் போர்', 'இலட்சிய வரலாறு' ஆகிய மூன்று நூல்கள் 1950-ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியால் தடை செய்யப்பட்டன.

### தடை...அதை உடை

அதேபோல தடை செய்யப்பட்ட இன்னொரு நூல், 'பெரியார் பொன்மொழிகள்'. பெரியார் அதைத் தனி நூலாக எழுதவில்லை. பெரியார் பல்வேறு கூட்டங்களில் பேசியதை, எழுதியதைத் தொகுத்து, 'பொன்மொழிகள்' என்று ஒரு நூலாக வெளியிடப்பட்டது. அந்த நூலுக்குத் தடை. 18.9.1950-இல் அண்ணா அவர்களுக்கும், பெரியார் அவர்களுக்கும் திருச்சி நீதிமன்றத்தில் ஒரே நாளில் ஆறு மாத சிறைத் தண்டனை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இருவரும் அடுத்தடுத்த அறைகளில் அடைக்கப்படுகிறார்கள்.

பெரியாருக்குக் கொடுக்கும் பழத்தை எல்லாம் கைதிகள் மூலமாக அண்ணாவுக்குப் பெரியார் கொடுத்து அனுப்புகிறார். அதை அண்ணா பின்னாளில் எழுதி, அப்படியே புளகாங்கிதம் அடைகிறார். ஆறு மாத சிறைத் தண்டனை. ஆனால், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டத்தின் எதிரொலியாக இருவரும் 10 நாள்களில் விடுதலை செய்யப்பட்டார்கள், ஆறு மாத நீதிமன்ற சிறைத் தண்டனை. அதை 10 நாளில் அரசு விடுவிக்கக்கூடிய அளவுக்கு நம்முடைய போராட்ட உணர்வு அன்றைக்கு இருந்தது என்பதை, வரலாறு நமக்கு நிரூபித்துக் காட்டுகிறது.

### அண்ணாவின் நேர்மை

அது மட்டுமல்ல, அண்ணா அவர்கள், 'திராவிட நாடு' இதழிலே இரண்டு தலையங்கங்கள் எழுதினார். ஒன்று 'பெரியார் ராமசாமியும் காந்தி ராமசாமியும்' - 14.4.1948. இன்னொன்று, 'வகுப்புவாதம்' - 18.04.1948. இந்த இரண்டு தலையங்கங்கள் எழுதியதற்காகத் 'திராவிட நாடு' இதழுக்கு 3,000 ரூபாய் ஜாமீன் கட்டச் சொல்லி அரசாங்கம் ஆணையிட்டது. அண்ணா, 'திராவிட நாடு' இதழிலே நிதி வேண்டி வேண்டுகோள் விடுத்தார். ஒரே நாளில் 3,000 ரூபாய் நிதி கிடைத்தது. 'ஜாமீன் கட்ட 3,000 ரூபாய் வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தவுடன், ஒரே நாளில் 3,000 ரூபாயைத் தொண்டர்கள் அனுப்பி வைத்தார்கள். அண்ணா நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தபிறகு, 'ஜாமீன் பணத்தைக் கட்டத் தேவையில்லை' என்று நீதிமன்றம் கூறியது. உடனே அண்ணா 9.11.49-இல் 'உங்கள் அனைவரின் முகவரியையும் வைத்திருக்கிறேன். யார் யாரெல்லாம் எனக்கு ஜாமீன் கட்டப் பணம் அனுப்பினீர்களோ, உங்களுக்கு அந்தப் பணத்தைத் திருப்பி அனுப்புகிறேன்' என்று 'திராவிட நாட்டில்' அறிவிப்பு வெளியிட்டார். அப்படிப்பட்ட நேர்மையாளர் பேரறிஞர் அண்ணா.



### போராட்டம்

பெரியாரிடம் இருந்து அண்ணா அவர்கள் பிரிந்து வந்தபோதே 'இந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தலைவர் கிடையாது; என்றைக்கு இருந்தாலும் தலைவர் நாற்காலி காலியாக இருக்கிறது. பெரியார்தான் எங்களுக்கு நிரந்தரத் தலைவர்' என்று தி.மு.க-வைத் தொடங்கும்போது அறிவித்தார். தி.மு.க., தி.க. போராட்டங்களைத் தாங்களாக விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை. 'போராட்டம் நடத்தும்படி நாம் நிர்ப்பந்திக்கப் பட்டோம்' என்று அண்ணா அதை எழுதியிருக்கிறார். 'போராட்டத்தைத் தேடி அலைவதில்லை தி.மு.க. ஆனால், போராட்டம் நடத்துகிற அளவுக்கு நம்மீது எதிரிகள் ஆதிக்கம் செலுத்தும்போது சும்மாவும் இருக்காது தி.மு.க.' என்று எழுதியிருக்கிறார்.

### இட ஒதுக்கீட்டுக்கான போராட்டம்

நீதிக்கட்சி ஆட்சியில் 1922-இல் 'கல்லூரி மாணவர் தேர்வுக் குழு' என்று உருவாக்கப்பட்டு, 50 சதவிகித இடங்கள் பார்ப்பனர் அல்லாத மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. பிறகு 1924-இல், பனகல் அரசர் ஆட்சியில் 'சென்னை பணியாளர் தேர்வு ஆணையம்' (Madras Staff Selection Commission) உருவானது. 1929-இல் 'சென்னை பொதுப் பணி ஆணையம்' (Madras Public Service Commission) என்று மாறியது. அதுதான் இன்றைக்கு டி.என்.பி.எஸ்.சி-யாக இருக்கிறது. அரசுப்பணிகளில் பார்ப்பனரல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு இருந்தது.

1924-இல் இருந்து நமக்கு இருந்த இட ஒதுக்கீட்டை, அரசியல் சட்டத்தில் இருந்த ஓட்டையைப் பயன்படுத்தி, பார்ப்பனர்கள் இல்லாமலாக்கினர். செண்பகம் துரைராஜன் என்கிற ஒரு பார்ப்பனப் பெண்ணைப் பிடித்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, 'இட ஒதுக்கீடு செல்லாது' என்று அறிவிக்கப்பட்து.

**வாலாசா வல்லவன்**
**மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக்கட்சி துணைப் பொதுச்செயலாளர்**



திராவிடர் கழகமும் தி.மு.க.வும் ஓராண்டுக்காலம் போராட்டம் நடத்தின. 1950 ஜூன் முதல் 1951 மே வரை போராட்டம் நடைபெற்றது. 14.08.1950-இல் பெரியார் 'மாணவர்களே! கல்லூரியைப் புறக்கணியுங்கள். ஏனென்றால், உங்களுடைய உயர் கல்வி பாதிக்கப்படுகிறது. நாம் இத்தனை ஆண்டுகள் அனுபவித்த இட ஒதுக்கீடு அடியோடு போகப்போகிறது' என்று அறிவித்தார். அன்றைக்கு ஒரே மேடையில் தமிழகம் முழுவதும் தி.மு.க.-வினரும், தி.க.-வினரும் பேசினார்கள். நான் தலைவராக ஏற்றுக்கொண்டு 40 ஆண்டுக்காலம் செயல்பட்ட ஆனைமுத்து அவர்களும், பேராசிரியர் அவர்களும், கிடங்கல் சம்பந்தம் அவர்களும் சீர்காழியில் பேசினார்கள். எல்லா ஊரிலும் கடையடைப்பு, இரவுப் பொதுக்கூட்டம், கல்லூரி மாணவர்கள் இப்படியெல்லாம் போராடித்தான் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்க, அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் வந்தது.

### குலக்கல்வி எதிர்ப்பு

அதேபோல்தான், குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம். பார்ப்பனர் அல்லாத பிள்ளைகள் படிக்கக் கூடாது என்பதற்காக, பெற்றோர் தொழிலை அரை நாள் செய்ய வேண்டும் என்று ராஜாஜி கொண்டுவந்த திட்டத்தை எதிர்த்து திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஓராண்டுக்காலம் போராடித்தான் ராஜாஜியைப் பதவி விலக வைத்தோம். அப்போதும் அவர் திரும்பப் பெறவில்லை. 'எனக்கு உடல்நலம் சரியில்லை, முதலமைச்சர் பதவியை விட்டுப் போகிறேன்' என்று ராஜாஜி பதவி விலகினார்.

இந்தி எதிர்ப்பில் 'தமிழர் பெரும்படை' 48 நாட்கள் நடைபயணம் நடத்தியதைப் போலவே குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்தும் 48 நாட்கள் நடைபயணம் நடத்தப்பட்டது. நீடாமங்கலம் ஆறுமுகம் தலைமையில் தஞ்சையிலிருந்து புறப்பட்டு, சென்னைக் கோட்டைக்கு வந்த பிறகு, முதலமைச்சராக இருந்த காமராஜரை சென்று பார்த்தார்கள். பிறகு, மூன்று நாள் கழித்து, குலக்கல்வி திட்டம் திரும்பப் பெறப்படுகிறது. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிடர் கழகமும் தமிழ்நாட்டு மாணவர்களின் நலனுக்காகவும் இளைஞர்களின் எதிர்காலத்துக்காகவும் ஒன்றாக இணைந்து போராடிய இயக்கங்கள். நம்முடைய போராட்டம் இன்னும் தொடர வேண்டும் என்பதற்காகத்தான் உதயநிதி அவர்கள், இப்படிப்பட்ட ஒரு கருத்தரங்கை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நாம் உணர்வு பெற வேண்டும். போராட வேண்டும். நம்மை சூழ்ச்சியால் வஞ்சிக்கும் மோடியின் பாசிச பயங்கரவாத ஆட்சியை வீழ்த்தி, திராவிட மாடல் அரசு மீண்டும் தொடர பாடுபட வேண்டும்.” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற 'முற்போக்கு புத்தகக்காட்சி'யில் ஒவ்வொரு பதிப்பகத்திலும் அதிகம் விற்பனையான நூல்கள் :**












நீலம் பதிப்பகம் :
**கொலையுண்ட காதலும் தெய்வமான பெண்களும்**

உயிர் பதிப்பகம் :
**அகஸ்தியர் எனும் புரளி**

கருஞ்சட்டைப் பதிப்பகம் :
**பாசிசத்திற்கு எதிரான ஸ்டாலின் குரல்**

பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் :
**பெண் ஏன் அடிமையானாள்?**